இருக்கிறது. எனவே, அவைகளை மொழி பெயர்த்து இன்றைய தமிழ் மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் நூல் வடிவத்தில் தருவ தற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த முயற்சியைத் தமிழகத்தில் அகழ்வாராய்ச்சித் துறையினர் மேற்கொண்டு வருகிருர்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை தற்பொழுது தமிழகத்தில் எந்தெந்த முக்கியமான பகுதிகளில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர், குறிப்பாக பூம்புகார் பற்றிய ஆராய்ச் சியை நடத்துகிருர்கள். மற்றும் தஞ்சை பிரஹதீஸ்வரர் கோயில், ஜெயங்கொண்டான் கோயில், வேலூர் கோட்டை கோயில் போன்றவைகள் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இருந்து வருகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கல்வெட்டுக்கள் எந்தெந்த ஆட்சி இந்த நாட்டை ஆளும் என்று கூறுகின்றதாகத் தெரிகிறது. யோசனை கூறும் ஒரு கல்வெட்டில் 25 ஆண்டுக் காலத்திற்கு சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஆள்வார்கள் என்று கூறப்பட்டிருக் கிறது. அந்தக் குறிப்பின்படி பார்த்தால் சூரிய வம்சம் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதய சூரியனைக் கொண்ட அரசுதான் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தால் இப்பொழுது கிளர்ச்சி செய்பவர்களிடத் தில் அந்த உறுதிப்பாட்டை அரசு சொல்லுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றி எனக்குத் தெரியவில்லை. ஆனல், ஆராய்ச்சியாளர்கள்தான் அது பற்றி ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை.

* 104—வினு : திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி ஆஸ்பிடலில் தற்போது எத்தனை அறுவை சிகிச்சை தியேட்டர்கள் இருக்கின்றன ?

(இ) அதில் குளிர்ப்பதனம் செய்யப்பட்ட (Air-conditioned) அறைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஐந்து. (இ) நான்கு.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி நான்காக இருக்கும் குளிர்பதன அறைகளில் இந்தக் கேள்வி போட்ட நேரத்தில்—இந்தக் கேள்வி போட்டு சில மாதங்கள் ஆகின்றன—ஒன்று கூட வேலை செய்ய வில்லை என்று தெரிகிறது. அப்படி அரசாங்கத்துக்கு அங்கிருந்து ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? அப்படி யென்றால் மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை நிலையங்கள் கோளாறு ஏற்பட்டால் உடனடியாக ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு எதிர்காலத்திலாவது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அறை களில் 3, 4, அறைகளில் உள்ளவை அப்பொழுது வேலை செய்யாமல் பழுதுபட்டு இருந்தது என்பதால் அவைகளை ஒன்றாகப் பழுது பார்க்க அனுப்ப முடியாமல் இருந்தது. 10–7–1972–இல் தியேட்டர் [ஏ]யில் குளிர்பதனக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதுவும்கூட உடனே பணியாற்ற முடியவில்லை. கார்பனேசேஷன் என்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டு இப்பொழுது பணியாற்றுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சி போன்ற மாவட்டத் தலைநகரங்களில் இருக்கும் மருத்துவ மனைகளில் உள்ள அறுவை சிகிச்சை அறை ஏர்கண்டிஷன் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அது பரிசீலிக் கப்படும்.

திரு. ந. தருமலிங்கம்: தலைவரவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனையில் குளிர்ப்பதனம் செய்யப்பட்ட அறைகளில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ? அப்படி யென்றால் எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குளிர்பதன அறையிலே அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காக என்று கட்டணம் இல்லை. மற்ற குளிர்ப்பதனம் செய்த அறைகளில் தங்கியிருப்பதற்காக என்று கட்டணம் இருக்க முடியும்.

*105 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் "சர்ஜிகல்" பகுதிக் காகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில் அது எப்போது கட்டப்படும்?

(உ) அதற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.